[1971 ஜூலை 14

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பவானி ஆற்றைப் பற்றிய கேள்வி. நொய்யலாற்றைப் பற்றிய கேள்வி முடிந்து விட்டது. இந்தக் கேள்வி அனுமதிக்கப்படவில்லை.

கோவையில் டயர் புதுப்பிக்கும் தொழிற்சாலை

* 236 வினு—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

அரசாங்கப் போக்குவரத்துத் துறையின்கீழ் டயர் புதுப்பிக்கும் தொழிற்சாலை ஒன்றைக் கோவையில் துவக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. சு. துரைசாமி : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் 'இல்லை' என்று பதில் சொன்னுர்கள். அரசாங்கப் போக்குவரத்துத் துறை கோவையில் பெரும் அளவுக்குப் பேருந்துகளை நிறுத்தி வைக்கிறது. மேலும் 50 மேற்பட்ட பஸ் நிறுவனங்களை தற்போது தேசியமயமாக்கியுள்ளது. ஆகவே, இப்போதாவது, ஒரு டயர் புதுப்பிக்கும் தொழிற்சாலையை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அதுபற்றிப் பின்னர் பரிசீலிக்கலாம்.

Thiru K.M. SUBRAMANIAM : May I know where the tyres of the Transport department vehicles are being retreaded ? Is it being done departmentally ? Is it being given to any contractor ? Or, is there any factiry run by Government for that purpose ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ராணித்தோட்டத்திலும், சென்னையிலும் டயர் ரீட்ரெடிங் யூனிட் போக்குவரத்துத் துறையில் இருக்கிறது. இங்குதான் அது செய்யப்படுகிறது.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, டயர் புதிப்பிக்கும் தொழிற்சாலை கோவையில் இல்லை என்று சொன்னுர்கள். அத்தகைய தொழிற்சாலை ஒன்று திருச்சியில் ஏற்படுத்தப் போவதாக செய்தி அடிபடுகிறதே, அது உண்மையா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : திருச்சி, சேலம் போன்ற பகுதியில் இருக்கிற வண்டிகளுக்காக திருச்சியில் என்ஜின் ரீ-கண்டிஷன் செய்கிற பணியையும், டயர் புதுப்பிக்கும் பணியையும் சேர்த்து ஒரு தொழிற்சாலை நிறுவ அரசாங்கம் திட்டம் வகுத்துள்ளது.

திரு. எம். சுரேந்திரன் : தேசியமாக்கப்படும் கொள்கையினுல் அரசாங்கப் போக்குவரத்து விரிவு அடைந்து வருகிறது. விரிவு அடைந்து வருகிற அரசாங்கப் போக்குவரத்து பஸ்களின் எண்ணிக்கைக்கேற்ப மோட்டார் உபபொருள்கள் கிடைக்கவும், டயர் புதுப்பிக்கும் பணி நடைபெறவும் இடையீடின்றி தொடர்ச்சியாக நடைபெற அரசாங்கம் விரும்புகிறதா? அப்படி விரும்பினுல் இதுபோன்ற தொழிற்சாலைகள் எங்கெங்கே ஆரம்பிக்கப்படும் ?

1971 ஜூலை 14]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அந்த விருப்பத்தின் அடிப்படையில்தான் இப்போது அத்தகைய் டயர் புதுப்பித்தல் போன்றவை செவ்வையாக நடைபெற தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. அதே போன்று, உப பொருள்களை அரசாங்கம் நடத்துகிற ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரிஸ மூலம் பெறுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்படுகின்றன.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறுகிற பதிலிலே, ராணித் தோட்டத்தில் இது சம்பந்தமான யூனிட் இருப்பதாகச் சொன்னார்கள். அது பற்றாக்குறையாக இருக்கிற காரணத்தினால் அதை விரிவுபடுத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இப்போது நமக்கு 21 ஆயிரம் டயர்கள் புதுப்பிக்க வேண்டியிருக்கின்றன. நம்முடைய பணிமனைகள் மூலம் கிட்டத்தட்ட 27 ஆயிரம் டயர்கள் புதுப்பிப்பதற்கான முழுத் திறன் இருக்கிறது. ஆகவே, இப்போது அதை விரிவுபடுத்தும் உத்தேசம் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சென்னையிலும், ராணித்தோட்டத்திலும் 27 ஆயிரம் டயர்கள் புதுப்பிக்கக்கூடிய திறன் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நம்முடைய டயர்கள் எல்லாம் இந்த இரண்டு பாக்டரியில் தான் புதுப்பிக்கப்படுகின்றனவா? அல்லது தனியார் யூனிட்டிலும் புதுப்பிக்கப்படுகின்றனவா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அரசாங்கப் போக்குவரத்து துறை டயர்கள் எல்லாம் இந்த ஆண்டு இரண்டு யூனிட்டுகளில் தான் புதுப்பிக்கப்படுகின்றன. மோட்டார் வெகிள்ஸ் மெயிண்டினன்ஸ் ஆர்கனிசேஷன் ஒன்று இருக்கிறது. அது அரசாங்கக் கார்கள், ஜீப்பேர் முதலியவற்றைக் கவனிக்கின்றன. அவர்கள் தனியாரிடத்தில் கொடுக்கலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : ராணித்தோட்டத்தில் இருக்கிற டயர் புதுப்பிக்கும் நிறுவனத்தில் போதுமான சிப்பந்திகள் இல்லை என்று கூறப்படுகிறதே. ஆகவே அங்கே தேவையான சிப்பந்திகளை நியமிக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, வேலைவாய்ப்புத் திட்டத்தில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள இந்த அரசு இந்த வகையான குறையை வைத்துக்கொள்ளாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. எம். இராஜா : கோவையில் இப்போதும் டயர் புதுப்பிக்கும் யூனிட் ஏற்படுத்தும் திட்டம் இல்லை என்று குறிப்பிட்டார்கள். கோவை, சேலம், தர்மபுரி, நீலகிரி ஆகிய மாவட்டங்களில் மட்டும் 1,500-க்கு மேற்பட்ட பேருந்துகள் இருக்கின்றன. அரசாங்கம் உச்சவரம்பு 10 என்றும் தனியார் பஸ்களுக்குக் கொண்டு வந்திருக்கிறது. ஆகவே இதை எல்லாம் உத்தேசித்து கோவையில் இந்த யூனிட் ஆரம்பித்தால் மிகவும் குறைந்த விலையில் எல்லோருக்கும் கிடைக்க வாய்ப்பு ஏற்படும். ஆகவே உடனடியாக இதை ஆரம்பிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, காலம் கனியும்வரை காத்திருக்க வேண்டுகிறேன்.